பக்கங்கள் : ஆறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 சித்திரை 09 ஞாயிற்றுக்கிழமை (22.04.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 146

# மட்டக்களப்பு வாழ் தமிழர்களில் 1/3 பகுதிக்கு மேற்பட்டோர் அகதிகள்!

## அவர்களின் முக்கிய வாழ்வாதாரத் தொழில்கள் நாசமாகி முடங்கிவிட்டன

மட்டக்களப்பு,ஏப்ரல் 22

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழும் தமிழர்களில் மூன்றில் ஒரு பகுதியினருக்கும் மேற்பட்டோர், இராணுவத் தாக்குதல்கள் காரணமாக தமது சொந்த வாழ்விடங்களை விட்டு வேறு பகுதிகளுக்கு அகதிகளாகச் சென்றுள்ளனர்.

இராணுவ மோதல்கள் இன்னும் ஓயாத நிலையிலும் அவர்களின் விருப்பத்துக்கு மாறாக வேறு இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டு வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் (உத்தியோகபூர்வமான) மொத்தச் சனத்தொகை 5 லட்சத்து 79 ஆயிரத்து 460 பேர்களாவர்.

அவர்களில் தமிழர்கள் - 4 லட்சத்து 26 ஆயிரத்து 796 பேர். முஸ்லிம்கள் - ஒரு லட்சத்து 51 ஆயிரத்து 487 பேர். சிங்களவர் 1,162 பேர்.

4,26,796 தமிழர்களில் போர் காரணமாக ஒருலட்சத்து 66 ஆயிரம் பேர் தங்கள் வாழ்விடங்களை விட்டு வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். படுவான்கரைப் பிரதேசத்தில் இருந்து 1,45,000 பேரும் வாகரைப்பகுதியில் இருந்து 21,000 பேரும் இடம்பெயர்ந்த தமிழ் மக்களில் அடங்குவர்.

தமிழ்மக்களின் இடப்பெயர்வு காரணமாக அப்பகுதிகளின் பிரதான பொருளாதார வளங்களாகவும் தொழில்களாகவும் இருந்த விவசாயம், கால்நடை, மீன்பிடி ஆகிய தொழில்கள் முற்றாக முடங்கிப் போயுள்ளன. தமிழ் மக்கள் தமது வாழ்வாதாரங்களை இழந்து கூடாரங்களிலும் பாடசாலைகளிலும் வேறு இடங்களிலும் அகதிகளாக அல்லாடி வருகின்றனர்.

மட்டக்களப்பு பிரதேசத்தின் 60 சதவீதமான நிலப்பரப்பில் வளமாக வாழ்ந்த தமிழ் மக்கள் அகதிகளாக மாறியுள்ளதால் மாவட்டத்தின் (தேசிய) வருமானம் பெருமளவில் வீழ்ச்சி கண்டுள்ளது.

இதேவேளை -

மட்டக்களப்பு மற்றும் வாகரையில் இருந்து இடம்பெயர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் முகாம்களில் தங்கியுள்ள

(06ஆம் பக்கம் பார்க்க)

## காத்தான்குடியில் 3 பஸ்கள் தீக்கிரை

மட்டக்களப்பு, ஏப்.22

மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி பஸ் நிலையத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மூன்று பஸ்கள் இனந்தெரியாத நபர்களால் தீயிட்டு எரிக்கப்பட்டன.

நேற்று அதிகாலை நடந்த இச்சம்பவம் குறித்து பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (அ-1)

## வெலிகந்தையில் கிளைமோர்; இரு சிப்பாய்கள் பலி

திருகோணமலை,ஏப்.22

திருகோணமலை மாவட்டத்தில் வெலிகந்தப் பகுதியில் நேற்று இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் இரண்டு படைகள் கொல்லப்பட்டனர். ஊடகத் தகவல் நிலையம் இத்தகவலைத் தெரிவித்தது.

ரோந்து சென்ற படையினரை இலக்கு வைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதேவேளை-

மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் அதிரடிப்படைச் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார். (அ-1)

## கிழக்கு அகதிகளும் இந்நாட்டு மக்கள்தானே அவர்களுக்கு ஏன் தனி அடையாள அட்டை?

### தேவையற்ற வேலை என்று அரியநேத்திரன் சீற்றம்

மட்டக்களப்பு அகதிகளை மீளக் குடியமரச் செய்வதற்காக அரசால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் குடும்ப அடையாள அட்டை வழங்கும் திட்டத்தை மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ப.அரியநேத்திரன் கடுமையாக எதிர்த்துள்ளார். இத்திட்டம் மூலம் மீள்குடியேற்றத்தை மேலும் தாமதமாக்குவதற்கே அரசு முடிவெடுத்துள்ளது என்று அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

''ஜூலை மாதம் 31ஆம் திகதிக்குள் மட்டக்களப்பு படுவான்கரை அகதிகளை மீளக்குடியமர்த்த அரசு தீர்மானித்துள்ளது.

''இந்தக்கால எல்லை மிக அதிகம். இந்நிலையில் மீள்குடியேற்றத்தை மேலும் தாமதப்படுத்தும் நோக்கில் அந்த அகதிகளுக்குப் புதிய அடையாள அட்டைகளை வழங்கும் நடவடிக்கையை அரசு திடீரென ஆரம்பித்துள்ளது.

''இந்த மக்களும் இந்நாட்டு மக்களே. அவர்களுக்குத் தனியாக எதற்கு அடையாள அட்டைகள்? இது அம்மக்களின் அடிப்படை உரிமையை மீறும் செயல்.

''குறிப்பாக படுவான்கரை அகதிகளுக்கு மாத்திரம்தான் இந்த அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன. இது பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

''இதன் பின்னோக்கம் என்னவென்பது அறியவேண்டியுள்ளது. அம்மக்களை இந்த அடையாள அட்டைகள் மூலம் வேறுபடுத்துவதை எம்மால் ஏற்க முடியாது.

''அரசு இவ்வாறான தேவையற்ற திட்டங்களை விட்டுவிட்டு அம்மக்களை உடனடியாகக் குடியேற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும். சொந்த இடங்களில் மீளக் குடியேறும் உரிமை அந்த மக்களுக்கு உண்டு. அதை அரசு பறிக்கக் கூடாது'' - என்றார். (சி)

## மட்டக்களப்பு அகதிகளின் நிலை குறித்து பாப்பரசரின் பிரதிநிதி நேரில் ஆராய்வு

மட்டக்களப்பு, ஏப்.22

மட்டக்களப்பில் தங்கியுள்ள அகதிகளின் நிலை குறித்து பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி மரியோ சொனாரி நேற்று நேரில் ஆராய்ந்தார்.

மட்டக்களப்புக்கு நான்கு நாள் விஜயம் மேற்கொண்டுள்ள அவர் நகரில் உள்ள அகதி முகாம்களுக்கு நேற்றுச் சென்று அவர்களின் பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்தார்.

அகதிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கேட்டறிந்த அவர், தான் கொழும்பு திரும்பியதும் இது விடயமாக உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதாகத் தெரிவித் தார்.

பாப்பரசரின் பிரதிநிதி இன்று வாகரைக்குச் சென்று அங்குள்ள மக்களை நேரில் சந்தித்துப் பேசவுள்ளார். (அ-1)

## இலங்கைக்கு ஆயுதங்கள் வழங்குவதில்லையென மத்திய அரசு உடனடியாக உத்தரவாதம் தரவேண்டும்

### பாட்டாளி மக்கள் கட்சி இராமதாஸ் கோரிக்கை



சென்னை,ஏப்.22

இலங்கைக்கு ஆயுதங்கள்வழங்குவதில்லை என்று மத்திய அரசு உத்தரவாதம் வழங்க வேண்டும். தமிழகத் தமிழர்களின் உணர்வுகளையும் கோரிக்கைகளையும் மத்திய அரசு அலட்சிப்படுத்தக் கூடாது; புறந்தள்ளிவிடக் கூடாது.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் புதுடில்லி - மத்திய - அரசின் பங்காளிக் கட்சியான பாட்டாளி மக்கள் கட்சியின் ஸ்தாபகர் எஸ்.இராமதாஸ்.

இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியா பேரழிவு ஆயுதங்களை வழங்குவதாக வெளிவந்த செய்தி உலகம் எங்கணும் பரந்து வாழும் தமிழர்களை அதிர்ச்சியுற வைத்துள்ளது. இத்தகைய நடவடிக்கைகள் இலங்கை அரசின் இன அழிப்புப் போரை ஊக்குவிப்பதுடன், இலங்கைத் தமிழர்களை அகதிகளாக மாற்றுவதற்கே உதவும் என்றும் டாக்டர் ராமதாஸ் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

இலங்கை அரசுக்கு இந்தியா பேரழிவு ஆயுத உதவி செய்வது தமிழர் விரோதச் செயற்பாடு என்றே எல்லாத் தமிழர்களும் கருதுகிறார்கள். தமிழகத் தலைவர்கள் தங்கள் மௌனத்தைக் கலைத்து, இலங்கைத் தமிழர்களின் இன அழிப்புக்கு உதவும் இந்தியாவின் ஆயுத விநியோகத்துக்கு எதிராகக் குரல் கொடுக்கவேண்டும். இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்குமாறு முதல்வர் கருணாநிதி மத்திய அரசிடம் கேட்டுக் கொள்ளவேண்டும் -

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் புனித பாப்பரசர் போன்ற உலகத் தலைவர்கள் தமிழர்களுக்கு எதிரான இராணுவத் தாக்குதல்களை நிறுத்தி பேச்சுவார்த்தையை மீளத் தொடங்குமாறு கேட்டுக்கொண்டபோதிலும், இலங்கை அரசு தனது இராணுவத் தாக்குதல்களைத் தொடர்ந்து வருகின்றது -

தமிழகத்து மக்களும் தலைவர்களும் இவ்விடயத்தில் உடனடியாகச் செயற்படாவிடின், இலங்கையில் வாழும் தமிழகச் சகோதரர்கள் இன ஒழிப்புக்கு ஆளாகுவர். அதன் பின்னர் இரங்கல் கூட்டங்கள் நடத்துவதால் பலனில்லை - என்றும் டாக்டர் இராமதாஸ் தமது அறிக்கையில் சுட்டிக் காட்டி உள்ளார். (அ)

## மாகாண சபைகளுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்குவதே ஸ்ரீ.ல.சு. கட்சியின் யோசனையின் பிரதான அம்சமாம்!

### அடுத்தமாதம் முதலாம் திகதி பகிரங்கப்படுத்தப்படும்

கொழும்பு, ஏப்.22

இப்போதுள்ள மாகாண சபைகளுக்கு சில கூடுதல் அதிகாரங்களை வழங்குவது என்பதே பிரதான ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அரசியல் யோசனையின் முதன்மை - பிரதான - அம்சம் என்று நம்பிக்கையாகத் தெரியவந்துள்ளது.

மேற்படி கட்சி யோசனையின் இரண்டாவது முக்கிய அம்சம், நாடாளுமன்றத்துக்கு மேலதிகமாக மேல்சபை (செனற்) ஒன்றை நிறுவி அதில் சிறுபான்மையினருக்கு கணிசமான பங்கை வழங்குவது என்பதாகும் - எனவும் அறியப்படுகிறது.

அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்குச் சமர்ப்பிப்பதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அரசியல் யோசனை ஒன்றை மிகச் சிரமத்தின்மத்தியில் தயாரித்து முடித்துள்ளது.

அந்த யோசனையின் நகல், நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெற உள்ள கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ள அம்சங்கள் மத்திய குழுவில் விரிவாக ஆராயப்பட்டு, இறுதியான முழுமையான வடிவம் கொடுக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து, தென்னிலங்கையின் இரண்டு பிரதான - பெரிய கட்சிகளில் ஒன்றான சுதந்திரக்கட்சியினால் யோசனைகள் மே மாதம் உத்தியோகபூர்வமாக

(06ஆம் பக்கம் பார்க்க)



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வத்திக்கானில் புனித பாப்பரசரைச் சந்தித்தபோது...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# FORUT

Assistant Accountant - Work station FORUT - Nelliady

Job Profile

Ability to maintain cash book, ledgers, receipts, vouchers, agreements, leave documents, preparation of budgets, financial requests, bank reconciliation and maintaining project accounts.

- Those who have passed in GCE A/L examination in commerce stream with part qualification in any accounting exam.
- A minimum two years experience in the same field.
- Ability to handle computer package accounting and MS office
- Good command of English
- Preference to candidates from Point Pedro or Karaveddy DS divisions
- Ability to prioritize issues and to work under pressure to meet deadlines, excellent interpersonal skills and ability to work in a team are essential competencies.

The position will be on contract basis. Interested candidates should send in their applications (preferably by fax or email) along with a letter of motivation on or before 28 April, 2007. Females are encouraged to apply.

**Assistant Programme Manager,**
**FORUT,**
**139, Temple Road, Jaffna**
**Email : jaffna@forut.lk Fax: (021) 222 2177**

*Only selected applicants for the interview will be contacted.*
*No telephone inquiries please*

(C/52296)

# UNIVERSITY OF JAFFNA, SRILANKA
## Faculty of Graduate Studies
## Examinations - 2006

Semester I examination for the following courses will be held in the University of Jaffna according to the undermentioned dates.

| Name of the Course | Examination will be commenced on |
|---|---|
| MA in Regional Planning | 28.05.2007 |
| MA in Development Studies | 28.05.2007 |
| MA in Population Development Studies | 28.05.2007 |
| PGD in Library & Information Science | 28.05.2007 |
| PGD in Education (Part time II) | 11.06.2007 |

Admission cards can be obtained from 14.05.2007 at the Faculty of Graduate Studies during the working hours.

**Registrar**
**19.04.2007**

(C/50049)

## 31ஆம் நாள் நினைவுகள்



அமரர்

**நாராயணபிள்ளை சின்னராசா**

தோற்றம் 04 - 02 - 1932

மறைவு 23 - 03 - 2007

மாசில்லா தந்தையே
மனங்குளிர் நேசனாரே
காலமெலாம் மெங்களுடன்
காசினியில் வாழ்வீரென
கண்டதெல்லாம் கனவாச்சே
காணல்நீர் தானாச்சே
உற்றதனைநாமிருக்க
உறவை நீங்கிப்போனதெங்கோ.

அம்மன் வீதி,
சாவகச்சேரி.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(59836)

## விற்பனைக்கு

எல்.ஜி.[LG], சிங்கர் [RNF] [புதிய நிலையிலுள்ள] நியூ மொடல் பிறிச்சுகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: அம்பாள் மில்

மல்லாகம் சந்தி,சங்கானை. தொ.பே.0776668918

## தவறிவிட்டது

2 பவுண் கைச்சங்கிலி 20.04.2007 வெள்ளிக் கிழமை அச்சுவேலி மகாவித்தியாலயச் சந்தி, இராசவீதிப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப் படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

ஜதாஸ் ஹோட்டல்
பஸ் நிலையம், அச்சுவேலி.

(சி-50055)

## SPECIAL ENGLISH COURSE
### Professional English

பின்வரும் பிரிவினருக்கான ஆங்கில வகுப்புகள் 28.04.2007 சனிக்கிழமை ஆரம்பமாகின்றன.

1. உயர் பதவிகளில் இருக்கும் அரச ஊழியர்கள்
2. பல்கலைக்கழக மாணவர்
3. HNDA பயிலும் மாணவர்

வகுப்புகள் தரத்திற்கு அமைவாக பிரிக்கப்படும்.

தொடர்பு:
**C.நடராஜலிங்கம்**
(Rtd.Area manager Bank of Ceylon)
குரும்பைகட்டி, மந்திகை,
புலோலி.

(59802)

## தேவை

**எமது நிறுவனத்துக்கு தையல் வேலை தெரிந்த பெண்பிள்ளைகள் தேவை.**

றொசானி காமன்ஸ்,
263/1, இராஜகாரியார் லேன்,
மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய்.

றெங்சானிகாமன்ஸ்,
கனகசபை புற்றுநோயாளர்
ஆஸ்பத்திரி அருகாமை,
சபாபதிப்பிள்ளை விதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

(59817)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கப்பல் மூலமாகவோ அல்லது விமானம் மூலமாகவோ உடனுக்குடன் உங்கள் பொதிகள் அனுப்பிவைக்கப்படும். மொத்த வியாபாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். கிளியரின்ஸ் இல்லாத பொருள்களுக்கு M.O.D.பெற்று உத்தரவாதத்துடன் உடன் அனுப்பி வைக்கப்படும்.

தொடர்பு: **EURO GROUPS**
0773846998, 0114542190.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை அதிபர்
சிறில் சுகந்தரன்
அவர்களின் அன்புத்தாய்
திருமதி
**தவமணி சிறில்**
(கத்தரின்)

அவர்களின் மரணச் செய்திகேட்டு எமது பாடசாலைச் சமூகம் ஆழ்ந்த துயரடைவதோடு, ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதிஅதிபர்,
ஆசிரியர்கள்,
மாணவர்கள்

யா/ ஆனைக்கோட்டை
றோ.க.த.க.பாடசாலை.

(59815)

உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், உணவுப் பொருள்கள், அன்பளிப்புப் பொருள்கள், உடுபுடைவைகள் மற்றும் VDO பிரதிகள் , CDக்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

## திருமுருகன் கொம் நெற்

259,கே. கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. : 7835
46,ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. தொ.பே. 7310

# Jaffna College Institute of Technology
### Vaddukoddai

**Apply for the following courses immediately**

DIPLOMA COURSES

1. Computer Programming & Data Processing
   Duration :- 1 year (full time)
   (Includes Application Packages, C, Java & Oracle)
2. CIVIL DRAUGHTSMANSHIP
   Duration :- 1 year (full time)
   (Includes Auto CAD, Quantity Surveying & Surveying & Levelling)

COMPUTER CERTIFICATE COURSES

1. MS OFFICE
   ♦ MS Word ♦ MS Excel ♦ MS Access ♦ Power Point
2. Hardware
3. Printing Technology
   ♦ Page Maker ♦ Photo Shop
4. C++ Programming
5. Visual Basic
   ♦ Corel Draw
6. Macromedia Flash - Duration :- 3 - 4 Months (Part time)

**FOR APPLICATION FORMS AND DETAILS CONTACT :-**

Director
**Jaffna College Institute of Technology,**
Vaddukoddai.
T.P:- 0602213139, 0212228275. E-mail :- jcit@sltnet.lk.

(C/50058)

# Hatton National Bank

**அடகுப் பொருள்களை ஏல விற்பனைக்கான அறிவித்தல்**

ஹற்றன் நஷனல் வங்கி -யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 15.02.2006 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகுப்பொருள்கள் 28.04.2007 சனிக் கிழமை அன்று இல.212, 214 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ். கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

உங்களின் பெறுமதிமிக்க பொருள்களை உடனே மீட்க முடியாவிட்டால் கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா 500) செலுத்தி

அல்லது

தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப்பொருள்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக்கொள்ளலாம்.

(C/50051)

முகாமையாளர்.

## ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி
**அருந்தவநேசம் ஸ்ரீதரன்**

(அகில இலங்கை திருவள்ளுவர் மகா சபையின் பொதுச் செயலாளரும் சமாதான நீதிவானுமாகிய ஆறுமுகம் ஸ்ரீதரனின் அன்புத் துணைவி)

தோற்றம் 09.02.1958 — மறைவு 03.05.2006

திதி:22.04.2007

எம் குடும்பத்தின் குலவிளக்கே
ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள்
ஓடி மறைந்தாலும் நீங்கிடுமா உங்கள் நினைவு!
உங்கள் ஆத்ம சாந்திக்காக நாங்கள் என்றென்றும் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!


*என்றும் உங்கள் நினைவுடன் வாழ்ந்து கொண்டிருக்கும்,*

சிவகுருவீதி,
ஏழாலை மேற்கு, ஏழாலை.

**கணவர், பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்

திருமதி *கண்மணிப்பிள்ளை பொன்னையா*



சரவணையைப் பிறப்பிடமாகவும் சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட கண்மணிப்பிள்ளை பொன்னையா 20.04.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராமநாதன் - சின்னாரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வித்துவான் பொன்னையாவின் (அதிபர், யா/நாகேஸ்வரி சரவணை) அன்பு மனைவியும் திருமகள், இராமநாதன், வாசுகி ஆகியோரின் பாசமிகு தாயும் குமார வேலு(விரிவுரையாளர், யாழ். கல்லூரி), காலஞ்சென்ற பிறேமளாதேவி ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற வெற்றிவேலு பசுபதிப் பிள்ளை, காலஞ்சென்ற செல்லம்மா வைரமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரியும் உமா(ஆசிரியை, அ.மி. ஆனைக்கோட்டை), அகிலன்(பல் வைத்தியர், காரைநகர்/ சங்கானை அரசினர் வைத்திய சாலை), யாழினி (ஆசிரியை, யாழ். கல்லூரி), யுகேந்திரன், தனுசன், தனுகரன் (மாணவர்கள், சென்.ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(22.04.2007)ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்
(இராமநாதன் -மகன்)

6, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்

(59850)

# கலாலயா
பயிற்சியகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [பெருமாள் கோயிலுக்கு அண்மையில்]

மகளிருக்கான துரித குறுகிய கால பயிற்சிகள்

- **3 மாத கால** கேக் ஐசிங், உணவு தயாரித்தல், கூந்தல் அலங்காரம் Fabric Painting, பூ வேலை; கைவேலை பயிற்சிகள்.
- **இருவார கால** சாறி பிளவுஸ், பஞ்சாபி, **Skirts, Blouses,** கவுண், **Nighty & Overcoat** தைத்தல் (இப்பயிற்சிகளுக்கு இரு வாரங்களுக்கு ஒரு முறை புதிய அனுமதிகள் தொடர்ந்து வழங்கப்படும்)
- புதிதாகத் தையல் பழக விரும்புவோருக்கான **6 மாத கால** தையல் வகுப்புகள்

**சனி, ஞாயிறு வகுப்புகள் ஆரம்பம் :- 29-04-2007**
**கிழமை நாள் வகுப்புகள் ஆரம்பம்:- 30-04-2007**

மேலும் விபரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ... பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளவும்.

## விற்பனைக்கு

ஸ்கூட்டி பப் - JZ xxxx தொடரிலக்கமுடையது. விற்பனைக்கு உண்டு.அத்துடன் லுமாலா மவுண்டன் சைக்கிளும், வயலின் ஒன்றும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 222 5179

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கத் தரப்பிலிருந்து அரசுக்கு வருகின்ற எதிர்பாராத அழுத்தங்கள்!

நாட்டில் மனித உரிமை மீறல்கள் அத்துமீறிப் போய்க் கொண்டிருப்பது குறித்து சர்வதேச சமூகம் அரசாங்கத்தின் மீது பல வகைகளிலும் அழுத்தங்களைப் பிரயோகித்து வருவது தெரிந்ததே. ஆனால், அரசாங்கமோ மக்கள் மத்தியில் தனக்குள்ள செல்வாக்குக் குறைந்து போய்விடாமல் இருக்க என்னசெய்யலாம் என்பதைப் பற்றியே அதிக அக்கறை கொண்டு செயற்படுவதாக மாதத்தின் இரண்டாம் வாரத்தில் இடம்பெற்ற பல நிகழ்வுகளும் செய்திகளும் எடுத்துக்காட்டுகின்றன.



மாதத்தின் முதல் வாரத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது கட்சிக் கூட்டமொன்றில் உரை நிகழ்த்திய போது அரச நிர்வாகத்தின் மக்கள் நலன் சார்ந்த தன்மைகளை ஊடகங்கள் மூலம் பரப்புரை செய்யும்படி வற்புறுத்தியதை இங்கு கூறலாம்.

இதேவேளை, அரசின் செயற்பாடுகளைக் கடுமையாக விமர்சிப்பதிலும், அது தோல்வியை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாக வெளிப்படுத்துவதிலும் முழுமூச்சாக இறங்கியுள்ளது எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி. பாதுகாப்புத்துறைச் செயலாளரான கோதபாய ராஜபக்ஷவை உடனடியாக நீக்கிவிட்டு அந்த இடத்தில் வேறு ஒருவரை நியமிக்கும் படியும் அக்கட்சி வற்புறுத்திவருகிறது. மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்துவருவதன் ஓர் அம்சமாக அமெரிக்கத் தரப்பிலிருந்து குறிப்பிட்ட கிழமையில் மேலும் ஒரு நெருக்குதல் வந்துள்ளது. அதன் தாக்கத்தை எவரும் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது.

**அமெரிக்க செயற்பாடும் அதன் எதிர்ப்பும்**

கடந்த காலங்களில் பயங்கரவாதத்துக்கு எதிராக செயற்படுவதற்கு அரசாங்கத்திற்குத் தாராளமாகவே அமெரிக்கா உதவி வழங்கி வந்துள்ளது என்பதை மறந்துவிடமுடியாது. ஏன் தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள்மீது கைவைத்தும் உள்ளது. பயங்கரவாத அமைப்புகள் பட்டியலில் இருந்து அதனை நீக்கவும் மறுத்துவந்துள்ளது. இதற்கெல்லாம் மாற்றீடாக நாட்டின் மனித உரிமை மீறல்களைத் தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். தமிழ்மக்களின் சட்டபூர்வ அபிலாஷைகளை நிறைவேற்றிவைக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் அமெரிக்கா எதிர்பார்த்தது.



**அமெரிக்கா நினைத்த நிலைமை மாறியது**

உண்மையில் ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்காலத்தில் இலங்கை இனப்பிரச்சினைக்கு உண்மையான ஒரு தீர்வு முயற்சி எடுக்கப்பட்டதாகக் கருதியதன் பின்னரே அமெரிக்கா இலங்கையில் பாதுகாப்புத்துறையின் மேம்பாட்டுக்கு பெரிதும் உதவத் தொடங்கியிருந்தது. போர்நிறுத்த உடன்பாட்டின் கீழும் டோக்கியோ பிரகடனத்தின் கீழும் அமைதியைக் கொண்டுவருவதற்கான உண்மையான நடவடிக்கை எடுக்கப்படுவதாக அமெரிக்கா கருதியிருந்தது, ஆனால், அந்த நிலைமை விக்கிரமசிங்க பதவி இழந்த கையோடு முற்று முழுதாக மாறிப்போய்விட்டது.

மனித உரிமை மீறல்கள், கருத்துச் சுதந்திரம் மற்றும் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கும் எண்ணம் என்பவற்றில் இந்த அரசாங்கம் காட்டிய பிரதிகூலமான அணுகுமுறையினால் இவை எல்லாமே தவிடுபொடியாகிவிட்டன. அமெரிக்காவும் ஏனைய நாடுகளும் காட்டிய நல்லெண்ணப் போக்கும் மாறத் தொடங்கிவிட்டது.

**செவிடன் காதில் ஊதிய சங்கு**

2006டிசம்பர் மாதம் அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையைச் சேர்ந்த 38உறுப்பினர்களும் செனட் சபையின் நான்கு முக்கிய உறுப்பினர்களும் இலங்கையில் மனித உரிமைகள் படுமோசமான நிலைமைக்குள் தள்ளப்பட்டுக் கொண்டிருப்பது குறித்து நினைவுறுத்தி, போர்நிறுத்த ஒப்பந்தத்தின் கீழ் பேச்சுகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதன் அவசியத்தையும் அறிவுறுத்தியிருந்தார்கள். ஆனால், அது செவிடன் காதில் ஊதிய சங்கொலியாகவே போய்விட்டது.

மேலும் ஏனைய எல்லா முனைகளிலும் தோல்வியைச் சந்தித்துள்ள அரசாங்கம், புலிகள் மீதான இராணுவ வெற்றிகள் மக்களை மகிழ்ச்சியில் வைத்திருக்கும் என்பது பொதுவான கருத்தாக இருந்துள்ளது. அதனால் அந்த முனையில் துரிதமாகவும் வேகத்துடனும் செயல்படுவதில் அரசு ஊக்கம் காட்டி வந்தது.

**கட்டுநாயக்க விமான தாக்குதலையடுத்து..**

ஆனால், கட்டுநாயக்க விமானத்தளம் மீது புலிகள் நடத்திய திடீர் தாக்குதல், அரசுத் தரப்பினரை அதிர்ச்சி யுடன் விழிப்படையச் செய்வதாக இருந்தது. இந்த நிகழ்வு பிராந்திய மற்றும் சர்வதேச பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக உள்ளது என வெளிப்படுத்தி சர்வதேச ஆதரவை அரசுக்கு ஆதரவாக பெற்றுக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சி பலனளிக்கவில்லை.!

*தெற்கு வார ஏடுகளில் வெளியான அரசியல் விமர்சனங்களின் தொகுப்பு*

புலிகளின் விடயத்தில் முழுக்கவும் அக்கறையில்லாமல் இந்தியா இருந்தமைதான் இந்தத் தாக்குதலுக்கு வழி செய்தது என இந்தியா மீது பழிசுமத்த முயன்றமை மேலும் இலங்கையைத் தனிமைப்படுத்துவதாக அமைந்துவிட்டது.

இந்த நிலையில் அமெரிக்கத் தரப்பிலிருந்து வரும் அழுத்தங்களை மேலும் இறுக்குபவையாகவும் உள்ளன. மனித உரிமை மீறல்கள் தொடர்பாகக் கவனம் செலுத்தி இராணுவ முனைப்பைக் கைவிட்டு பேச்சுகளை ஆரம்பிக்கும் படி வற்புறுத்துவதாய் அவை உள்ளன.

**ஜனநாயகக் கட்சி காங்கிரஸ் உறுப்பினர் விடுத்த கண்டனம்**

இந்நாட்டில் ஆள்கள் காணாமல் போதல் அதிகரித்துள்ளமையைக் கண்டித்து கலிபோர்னியாவைச் சேர்ந்த ஜனநாயகக் கட்சியின் காங்கிரஸ் உறுப்பினர் ரொம் லான்ரொஸ் கடுஞ்சொற்களில் விடுத்த அறிக்கை இதைத் துலாம்பரமாக வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது.

வெளிநாட்டு அலுவல்கள் குழுவின் தலைவரான லான்ரொஸ் பேச்சுகளை நோக்கிய திசையில் இலங்கை அரசாங்கத்தை நெருக்கித் தள்ளும்படியும் சர்வதேசத்துக்கு கோரிக்கை விடுத்தார். மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து மோசமடைந்து வருகின்றன. சிறுவர் படை, நீதிக்குப் புறம்பான கொலைகள், ஆள்கடத்தல்கள் போன்றமை நாட்டின் சில பகுதிகளில் சாதாரண நிகழ்வுகளாகிவிட்டன. உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்றவாறான செய்திகள் எம்மைக் கவலையில் ஆழ்த்துகின்றன. போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கு உண்மையாக மதிப்பளித்து மீண்டும் பேச்சு மேசைக்குத் திரும்பும் படி சகலரையும் வற்புறுத்துகிறேன். இந்த வன்செயல்களை இராணுவ நடவடிக்கையினால் முடிவுக்குக் கொண்டுவர முடியாது. ஏற்கனவே மோசமாகியுள்ள மனித உரிமைகளை இது விரிவுபடுத்தும் என்று அவர் தெரிவித்துள்ளார்.



**'பிறீடம் ஹவுஸ்' விடுத்துள்ள அறிக்கை**

இவரது அறிக்கைக்கு முன்னர் குடியரசு மற்றும் ஜனநாயகக் கட்சிகளின் மத்தியில் செல்வாக்குப்பெற்ற 'பிறீடம்ஹவுஸ்' (சுதந்திர இல்லம்) என்ற அதிகாரமிக்க அமைப்பு விடுத்திருந்த மிக மோசமான விளைவுகளை இலங்கை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்று கருதப்படுகிறது. அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிகளில் ஒருவரான எலினோர் ரூஸ் வெல்டின் பாரியாரால் ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பு வாஷிங்டனில் அதிக செல்வாக்கைக் கொண்டதாகும்.

**நிதி உதவிகளை நிறுத்துமாறு சிபார்சு**

இலங்கைக்கு வழங்கப்படும் நிதி உதவிகளை நிறுத்திவிட வேண்டும் என்று இந்த அமைப்பு விடுத்துள்ள அறிவிப்பு பாரிய விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். மோதலில் ஈடுபட்டுள்ள தரப்புகளை சமமாகக் கண்டித்துள்ள இந்த அமைப்பு அரசாங்கத்தின் செயற்பாடுகள் மனித உரிமைகளை வெகுவாகப் பாதித்திருப்பதாகக் குறிப்பிட்டுக் கண்டித்துள்ளது. 2006ஆம் ஆண்டளவில் தமிழீழ விடுதலைப் புலிகள் மெதுவாக சிவில் யுத்தத்துக்குள் சென்றார்கள்; இதனால் இருதரப்புக்குமிடையிலான அமைதி ஒப்பந்தம் அர்த்தமற்றதாகப் போனது. ஆனால், அரசாங்கத்தின் எதிர் நடவடிக்கைகளோ அடிப்படை மனித உரிமைகளையே மீறுவதாக அமைந்துவிட்டன என்று மேலும் தெரிவிக்கின்றது.



*தொகுப்பு: நந்தன்*

**ரணில் கிளப்பியுள்ள புதிய சர்ச்சை**

நாட்டின் பாதுகாப்பு நிலை சீர்குலைந்து போயுள்ளமைக்கு

(5ஆம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை பதவி நீக்குமாறு ஐ.தே.க. நெருக்குதல்

# இலங்கை சுதந்திரம் அடைந்த நாள் தொடக்கம் ஜனநாயகம் வெறும் காட்சிப் பொருளாகவே உள்ளது

**வடமாகாணத்தின் பொலீஸ் சுப்பிரிண்டென்டாகப் பணியாற்றியவர் ஆர்.சுந்தரலிங்கம். கொழும்பில் பிரதிப் பொலீஸ்மா அதிபராகவும் நீண்ட காலம் சேவையாற்றினார். அதன் பின்னர் "இன்ரபோல்" எனப்படும் சர்வதேச பொலீஸ் நிறுவனத்தில், நாசகாரத் தடுப்புப் பிரிவிலும் சேவை புரிந்தவர். இப்போது லண்டனில் வசித்து வருகிறார்.**

**"எனக்குத் தெரிந்த யாழ்ப்பாணம்" என்ற தலைப்பில், தமது பழைய ஞாபகங்களை இரைமீட்டு அவர் எழுதிய கட்டுரை, கொழும்பில் இருந்து வெளிவரும் "த ஐலண்ட்" பத்திரிகையில் (25.03.2007 இல்) பிரசுரமாகியது.**

**அதன் சாராம்சத்தின் தமிழ்வடிவம் 01-04-2007 உதயன் இதழில் பிரசுரமாகியது. இது இரண்டாவது பகுதியாகும்.**

அறுபது எழுபதுகளில் தமிழ் இளைஞர்கள் வல்வெட்டித்துறையில் இருந்து படகு மூலம் நாகபட்டினத்துக்கோ வேதாரணியத்திற்கோ சென்று திரைப்படம் பார்த்து விட்டுத் திரும்பினர். திரைப்படம் வெளியான முதல் நாள் முதல் காட்சி பார்ப்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது. பொசன் பண்டிகைக்கு அனுராதபுரத் திலிருந்து நயினாதீவுக்கு ஆயிரக்கணக்கான சிங்கள யாத்திரிகர்கள் யாத்திரை மேற்கொள்வது வருடாந்த நிகழ்வு.

**பிரச்சினைகள் இல்லாத இடம் யாழ்ப்பாணம்**

1971 ஆம் ஆண்டு அம்பாறையில் வைத்து றோகண விஜேவீர கைது செய்யப்பட்டபோது அவரை யாழ்ப்பாணக் கோட்டையிலுள்ள சிறைச்சாலையில் எனது நேரடிக் கண்காணிப்பின் கீழ் சிறையில் வைத்திருக்க பிரதமர் சிறிமாவோ தீர்மானித்தார். யாழ்ப்பாணம் பாதுகாப்பான பிரச்சினைகள் எதுவுமில்லாத இடம் என்று பாதுகாப்புச் சபை தீர்மானித்ததே இதற்குக் காரணம்.

கோட்டையினுள் அமைந்திருந்த அரசரின் வாசஸ்தலம். இது பின்னர் உயர் பிரமுகர்களின் (V.I.P) வதிவிடமாக விளங்கியது. ஆளுநர், சுப்ரீம் கோர்ட் நீதி பதிகளின் தங்குமிடமாகவும் விளங்கியது. டச்சு தேவாலயம் என்பன இன்று இல்லை.

*தமிழில்: ந.பரமேஸ்வரன்*

1971ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜே.வி.பி. கிளர்ச்சி தமிழ் இளைஞர்களின் கண்களைத் திறக்கச் செய்தது. யாழ்ப்பாணக் கோட்டையில் றோகண விஜேவீர சிறையிலிருந்தபோது சுவரில் எழுதப்பட்டிருந்த வாசகங்களை வாசித்துக்கொண்டுநின்றபோதும் தமிழ் சிறைக்காவலர்களுடன் உரையாடிய போதும் தமிழ் இளைஞர்களும் ஒரு நாள் ஜே.வி.பியை... கப் போராடுவார்கள் என்ற எண்ணம் என் மனதில் தோன்றியது. தமிழ் இளைஞர்களிடையே போராட்டம் பற்றிய சிந்தனையை விதைத்தது ஜே.வி.பிதான்.

**தமிழ் அரசியல் வாதிகள் நிர்வாகத்தல் தலையிடுவதில்லை**

கல்விதான் யாழ்ப்பாணத் தவர்களின் வாழ்க்கையை இயக்கும் இரத்த நாளம். காலையில் தோளில் புத்தகப் பைகளுடன் மாணவர்களும் மாணவர்களை ஏற்றிக் கொண்டு பெற்றோரும் விரைந்து செல்வர். பல்வேறு உத்தியோகங்களிலும் தமிழர்கள் இணைந்திருந்ததை இது காட்டுகிறது. வடபகுதி அரசியல்வாதிகள் அனைவருமே சட்டத்தரணிகள். இவர்கள் மிகவும் நேர்மையானவர்கள். அரச நிர்வாகத்திலோ பொலீஸாரின் கடமைகளிலோ இவர்கள் தலையிடுவதில்லை. கல்வியறிவு குறைந்த ஏழை விவசாயிகள் வறண்ட மண்ணில் வறட்சியான காலநிலையில் விவசாயம் செய்வது ஓர் அதிசயம். இவர்களின் கடின உழைப்பு வெங்காயம், வாழைப்பழம், மாம்பழம் போன்ற பொருள்களாக லொறிகளில் ஆனையிறவு ஊடாக கொழும்புக்கு அனுப்பப்பட்டது.

**இந்தியத் தலைவர்களின் விஜயத்தின் போது யாழ்ப்பாணமும் நிகழ்ச்சி நிரலில்**

இந்தியாவும் இலங்கையும் நீண்ட சமூக, கலாசார, வர்த்த, மத, நட்புறவைக் கொண்... இந்து மதமும் புத்த மதமும் இலங்கை மக்களின் நாளாந்த வாழ்க்கையில் பிணைக்கப்பட்டுள்ளன. இந்து மதம் இலங்கைத் தீவுக்கும் நீடிக்கப்பட்டது. பௌத்தம் தானாகவே வந்தது. வி.வி.கிரி, விஜயலஷ்மி பண்டித், ஜெயப்பிரகாஷ், நாராயணன் போன்றவர்களின் யாழ்ப்பாண விஜயங்கள் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நல்லுறவுப் பிணைப்பை எடுத்துக் காட்டுகின்றன. இலங்கைக்கு அரச விருந்தினர்களாக இந்தியாவிலிருந்து வருபவர்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வதையும் தமது நிகழ்ச்சிகளில் ஒரு பகுதியாகக் கொண்டிருப்பது வழக்கம்.

விஜயலக்ஷ்மி பண்டித்தின் யாழ்ப்பாண விஜயத்தை மீண்டுமொரு முறை ஞாபகப்படுத்திப் பார்க்க விரும்புகின்றேன்.

**மூத்த பொலீஸ் அதிகாரி ஒருவரின் அந்த நாள் ஞாபகம்**

விஜயலக்ஷ்மி பண்டித் யாழ்ப்பாணம் வந்த போது பெருந்திரளான மக்கள் கூடி அவரை வரவேற்றனர். அதன் காரணமாக மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வு திறந்த வெளிக்கு மாற்றப்பட்டது.

நேரு குடும்பத்தினர் எங்காவது உரை நிகழ்த்தினால் இடியுடன் கூடிய மழை பெய்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் மக்கள் வெள்ளம் அலை மோதும் இது உண்மை.

**ஜனநாயகக் காட்சிப் பொருளே**

இலங்கை சுதந்திரமடைந்த நாள்முதல் ஜனநாயகம் என்பது ஒரு காட்சிப் பொருளாகவே காணப்படுகின்றது. கற்பனையான ஒன்றை நோக்கி மக்கள் வழிநடத்தப்பட்டு இனரீதியாகப் பிளவுபட்டு நிற்கின்றார்கள். கல்வி, கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், தெரிவு செய்யும் உரிமைகளுடனான ஜனநாயக விடுதலை இன்றைய உச்சக்கட்ட தேவையாகவுள்ளன. *

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகக் கடமைபுரியும் திருமதி கலாநிதி யோகராஜா அவர்களின் அன்புத் தாய்
திருமதி அ.சுப்பிரமணியம் அவர்கள்
காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

(59825)

யாழ். போதனா வைத்தியசாலை
தாதிய உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
**ஆழ்வாப்பிள்ளை அரியமலர்**

தோற்றம் 20.08.1944 மறைவு 24.03.2007

அல்வாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எங்கள் குடும்ப விளக்கு -அன்பு மகள் - அன்புச் சகோதரி - அன்பு மருமகள் ஆழ்வாப்பிள்ளை அரியமலர் அவர்கள் கடந்த 24.03.2007 சனிக்கிழமை காலமான செய்தி கேட்டு நேரில் வருகை தந்தோருக்கும் தொலைபேசி, தந்தி, தபால் மூலம் அனுதாபம், ஆறுதல் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் நாளை (23.04.2007) திங்கட்கிழமை திக்கம் துளாயிற் பிள்ளையார் கோயில் முன்றிலில் காலை 6 மணியளவில் நடைபெறவிருக்கும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியை நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் மதிய போசன உபசாரத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மலர் வாசா,
அல்வாய் வடமேற்கு,
அல்வாய். (59561)

தாய் - ஆ.சின்னம்மா,
ஏனைய சகோதரர்கள்,
சகோதரிகள், மர்மா, மாமி.

## தவறிவிட்டது

சிவசுப்பிரமணியம் உயிரோவியம் என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம், வங்கி அட்டைகளுடன் சென்.ஜோன் கல்லூரிக்கும் கோயில் வீதிக்குமிடையே பேஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 2/1, மருதடி லேன், நல்லூர் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தொ.பே.இல. 021 222 2452 சன்மானம் வழங்கப்படும். (59812)

## விற்பனைக்கு

சாவகச்சேரி தபால் கந்தோருக்கு அருகில் 3 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:
0779383241, 0776720505, 021 4590411

## நாய்க்குட்டி விற்பனைக்கு

ஜேர்மன் சப்பேட்பெண் நாய்க்குட்டிகள் இரண்டு விற்பனைக்குண்டு.
தொடர்பு: திருநெல்வேலி.
தொ.பே.இல..: 0777111366, 021 222 5191

## வீடு வாடகைக்கு

835, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணத்தில் மாடி வீடு விற்பனைக்குண்டு. அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது [ஸ்ரான்லிக் கல்லூரிக்கு அருகில்]
தொடர்பு: 222 9290






## விநியோகஸ்தர்கள் தேவை

யாழ், கிளிநொச்சி, மன்னார்,மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் -

'கிளினோல்' (Clenol) தயாரிப்புக்களான 'கிளினோல் சவர்க்காரம், கார்வோஷ், சலவைத் தூள் ஆகியவற்றை சந்தைப்படுத்துவதற்கான முகவர்களை

'கிளினோல்'

உற்பத்திகளின் தயாரிப்பு நிறுவனம் எதிர்பார்க்கிறது.

**மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்க:**
நஷ்றான் : 0714 259939
அல்லது
Fax:037 2232084, E-mail: clenol@sltnet.lk

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் 31ஆம் நாள் நினைவஞ்சலியும்



அன்னையின் மடியில் 27 ★ 06 ★ 1939
ஆண்டவன் அடியில் 23 ★ 03 ★ 2007

(59786)

**திருமதி பொன்னம்மா சுந்தரலிங்கம்**

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வ இன்று (22.04.2007) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இணுவில் மேற்கு, இணுவில். - குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

கடந்த 23.03.2007அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி



**திருமதி கந்தையா இராசம்மா**
(தீபமஹால், சங்கானை)

தோற்றம் 10.05.1936
மறைவு 23.03.2007

அன்பான உறவொன்று ஆண்டவனடி
சென்றதோ
பண்பான உயிரொன்று பரமனடி
சென்றதோ
எங்குதான் சென்றீர்கள் உம் உறவுகளைத்
தவிக்கவிட்டு
ஓடி வந்திடுங்கள் உங்கள் உறவுகளை
அரவணைக்க.

இறைபதம் அடைந்தஎங்கள் குடும்பத் தலைவி அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (22.04.2007) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்
பிள்ளைகள்: மகாலிங்கம், யோகேஸ்வரி (ஜேர்மனி),
மருமக்கள்: தங்கேஸ்வரி, இரத்தினம் (ஜேர்மனி),
பேரப்பிள்ளைகள்: ரமேஸ், அனுஷா (ஜேர்மனி),
பிரதீபன் (பிரான்ஸ்), ஜெயசீலன் - அஜந்தா (ஜேர்மனி),
அனுப்பிரியா, அனிதா, ஜேர்மனியில் வசிக்கும் சுதர்சன் - மாதுரி,
சுரேஸ்-சுபாஜினி, சுரேகா, சுஜினா
பூட்டப்பிள்ளைகள்: ஜேர்மனியில் வசிக்கும் செயோன், ஹரிஸ்,
சௌமியா, சௌஜனா, ...

சந்தி ஒழுங்கை,
சங்கானை. (சி/52290)

## விற்பனைக்கு

P 4 கணனி, ஸ்கானர், D.V.D. (ரைட்டருடன்), ¾ HP மோட்டார், 1000 W ஸ்ரீராம் கொண்டா ஜெனரேற்றர் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
0777156260
நெல்லியடி.

## தவறிவிட்டன

15, மூர் வீதி, வெள்ளவத்தை, கொழும்பு - 06 என்னும் முகவரியுடைய திருமதி ரூபா அமிர்தசோதி மோகன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.547911750V), விசேட அடையாள அட்டை (இல.0902008157) மற்றும் அலுவலக அடையாள அட்டை என்பன திருநெல்வேலி சிவன் கோயிலில் தவறிவிட்டன.

இவற்றைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து நல்லூர் பிரதேச செயலகத்தில் அல்லது 30/1 சிவன் கோயில் வீதி, திருநெல்வேலி என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன். சன்மானம் வழங்கப்படும்.

## விற்பனைக்கு

வீட்டுத் தளபாடங்கள், 4'' கொங்கிறீற் கற்கள் 200, 4 மர ஜன்னல்கள் 3'x3', எண்ணெய் வெற்று பரல்கள் 4, VCD பிளேயர் என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு:-
S.S. நாதர்
இல.16/3, விதானையார் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

நல்ல இன டொபர்மன் லெப்ரடோல் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. பார்வையிடும் நேரம் காலை 9 மணிமுதல் பிற்பகல் 2 மணி வரை.
தொடர்பு:-
160, மானிப்பாய் வீதி,
பழைய ஈழநாடு பேப்பர் காரியாலயம் முன்பாக.

## ஓராண்டு நினைவில்...



மலர்வு 19★02★1926
உதிர்வு 03★05★2006

**அமரர் கந்தையா துரைராஜா**
(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

ஆண்டு ஒன்று கடந்தாலும் ஆறிடாது எம் இதயங்கள்!
எமது ஆருயிர் அப்பா, நீங்கள் தெய்வமாகி
எமை வழி நடத்த என்றும் எமதருகில் இருப்பீர்! (சி/50053)

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவில் வாழும்:
மனைவி, மக்கள், மருமக்கள்.

## அழியாத நினைவில் ஈராண்டுகள்



மலர்வு 24 - 04 - 1928
மறைவு 13 - 05 - 2005

கலாபூசணம் சேரகச் சேவித சொர்ணக் கவிக்குயில்
**அமரர் வி.கே.இரத்தினம்**
திதி:ஷஷ்டி 22.04.2007

மண்ணில் நல்ல குடும்பத் தலைவராய்
இசைநாடகத்தில் நற் கலைஞராய்
கட்டடக் கலையில் வல்லவராய்
வாழ்ந்த எங்கள் தந்தையே!
விண்ணக வாழ்வில் நீர் கலந்து -ஆண்டுகள்
இரண்டு ஓடி மறைந்து விட்டது
ஆனாலும் எங்கள் இதயங்கள் இன்றும்
உங்கள் நினைவாகவே இருக்கின்றன.

34/3,கலைமகள் வீதி,
அரியாலை,யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

## பாப்பரசரின் நற்போதனையை ஏற்றுச் செயற்பட அரசு தயாரா?

'திருத்தந்தையின் தரிசனம் திருந்துவதற்கு நல்வழிப்படுத்துமா?'-என்று ஆற்றாண்மை யோடும் ஆதங்கத்தோடும் இப்பத்தியில் சில தினங்களுக்கு முன்னர் கருத்து வெளியிட்டிருந்தோம். அந்தக் கருத்தை ஊக்கப்படுத்துவதுபோல பரிசுத்த திருத்தந்தை 16 ஆவது ஆசீர்வாதப்பர் இப்போது அறிவுரை உரைத்திருக்கின்றார்.

தம்மைச் சந்தித்த இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் அமைதிக்கான மார்க்கத்தை - சமாதானத்துக்கான பாதையை - தெளிவாகவும் வெளிப்படையாகவும் எடுத்துரைத்திருக்கின்றார் திருத்தந்தை.

*''மனித உரிமைகளுக்கு மதிப்பளியுங்கள்! அமைதிப் பேச்சுக்கு மீண்டும் திரும்புங்கள். அதன்மூலம் மட்டுமே இலங்கையில் இரத்தக் களரியை உண்டாக்கும் வன்செயல்களை முடிவுக்குக் கொண்டுவரலாம்''*- என்பதை இலங்கை அதிபருக்கு புனித பாப்பரசர் விளக்கமாக எடுத்துரைத்தார் என்று தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

பௌத்த - சிங்கள மேலாண்மைத் திமிரில் ஊறிக் கிடக்கும் தென்னிலங்கைச் சிங்களம் அந்தப் பேரினவாதப் போக்குக் காரணமாக சிறுபான்மை இனத்தவர்களை அடக்கி, ஒடுக்கி, அடிமைப்படுத்தி அவர்களின் அடிப்படை உரிமைகளை நிராகரித்து கொடூர ஆட்சி புரிந்து வருகின்றது. தமிழர்களுக்கு நியாய உரிமைகளும் கௌரவ வாழ்வும் மறுக்கப்பட்டதால் - சிறுபான்மையினருக்கும் பெரும்பான்மையினருக்கும் இடையிலான முரண்பாடுகள் முற்றி - பெரும் இனப்போர் இலங்கையில் வெடித்துள்ளது.

சிறுபான்மையினரான தமிழர்களுக்கு நியாயம் செய்யாமல், பெரும்பான்மையினரான சிங்களவர்களின் மேலதிகச் செருக்குப் போக்கை மேலும் திருப்திப்படுத்தும் விதத்தில் அடக்குமுறை நெறியைக் கையாள்கிறது தென்னிலங்கை அரசு. விட்டுக்கொடுத்து சமரசம் செய்யும் நீதியான நெறிமுறையை விடுத்து, இராணுவப் பலத்தின் அடிப்படையில் அடக்கி நொறுக்கும் அதிகாரப்போக்கை ஒரே பிடியாக பிடித்து நிற்கின்றது அது.

இதனால் இலங்கையில் அமைதி நிலை கானல் நீராகி, நாடு பெரும் அமளிக்குள் - சமருக்குள் - சிக்கித் தடுமாறுகின்றது. வன்முறை இரத்தக்களரி கட்டவிழ்த்து விடப்பட்டு, ஊழிக்கூத்தாக அது பேயாட்டம் போடுகின்றது.

இந்தச் சமயத்தில் சமாதானத்தின் தூதர் இயேசு பிரானின் வழியில் உலகை நெறிப்படுத்தும் புனித திருத்தந்தை பாப்பரசர் போன்றவர்களது தரிசனமும், சந்திப்பும் போதனையுமாவது இலங்கை ஆட்சித் தலைமையை சரியான பாதைக்கு நெறிப்படுத்தாதா என்ற ஆதங்கம் தமிழர்கள் மனதில் எழுவது நியாயமானதே.

அவர்கள் எதிர்பார்த்தது போன்றே நியாயத்தை - நீதியை - சரியான பாதையை - இலங்கை அதிபருக்கு தமது ஆலோசனையாகவும் வழிகாட்டலாகவும் எடுத்துரைத்திருக்கின்றார் திருத்தந்தை.

அமைதியையும் சமாதானத்தையும் எட்டுவதற்கு புனித பாப்பரசர் காட்டிய சீரிய நெறியையும், ஆலோசனையையும் இலங்கை அதிபரின் இந்த ஆட்சி ஏற்றுக் கொள்ளுமா, அதன்படி நடக்குமா என்பதே கேள்வி.

குருவாயூர் அப்பனின் தரிசனத்தையும் பௌத்த காயாவின் தரிசனத்தையும் முடித்துக் கொண்டுவிட்டார் அதிபர் மஹிந்த. சுவாமி அமிர்தானந்தா மயி அம்மாவின் ஆசீர்வாதமும் அவருக்குக் கிட்டியாகிவிட்டது. இப்போது புனித திருத்தந்தை பாப்பரசரின் தரிசனமும் அவருக்கு கிடைத்துள்ளது. மிக விரைவில் தலாய் லாமாவையும் அவர் சந்திக்கக்கூடும் எனத் தகவல். இனி சுவாமி சத்தியசாயி பாபா, கல்கி பகவான் போன்ற புனிதர்களது அருட்கடாட்சம்தான் அவருக்குப் பாக்கி.

அவ்வளவும் கிடைத்தாலாவது அவரது பாதை இனசமரசத்திற்குத் திரும்புமா என்பது தான் கேள்வி.

முன்னர் இப்பத்தியில் நாம் குறிப்பிட்டது போல- 'கெடுவான் கேடு நினைப்பான்' என்பது போல- அவரது செயற்பாடும், அவரது அரசின் போக்கும் அழிவை நாடும் இராணுவ அடக்குமுறையை அடிப்படையாகக் கொண்டே நிற்கின்றன.

இத்தகைய குரூரப் போக்கை புனித திருத்தந்தை போன்றோரின் தரிசனங்கள் மாற்றியமைக்க வேண்டும். அதன் மூலம் அமைதித் தீர்வுக்கு வாய்ப்பும் வழியும் கிட்ட வேண்டும் என்பதே தமிழர்களின் எதிர்பார்ப்பு, நம்பிக்கை, விருப்பு எல்லாமும்.

ஆனால் அஹிம்சை, கருணை, காருண்யம், அன்பு போன்ற உயர்சீலங்களைப் பொழிந்த புத்தரைத் தமது மூலவழிகாட்டியாகக் கொண்ட பௌத்த மதத் துறவிகளை அரவணைத்துக் கொண்டுதான்- மதம் என்னும் மதம் பிடித்தலையும் காவியுடையினர் கிளப்புகின்ற இராணுவ வெறித்தனத்தை தமது கொள்கைக் கோட்பாடாகவும், வழிகாட்டலாகவும் வைத்துக் கொண்டுதான் - இன அடக்குமுறையைக் குரூர வடிவத்தில், ஒவ்வா நெறியில் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றார் மஹிந்தர்.

அவருக்கு புனிதர்களுடன் ஏற்படும் தொடர்பும், வழிகாட்டல்களும், தரிசனங்களும் நல்ல பாதையை- எதிர்காலத்தை- திறந்து விடும் என்று எதிர்பார்ப்பதில் அர்த்தமில்லை.

நாட்டுத் தலைவருக்கு சாதுக்களுடன் ஏற்படும் தொடர்பு அவரை சாதுவாக்கினால் நல்லது. அதைத் தவிர, இத்தகைய சந்திப்புகளின் பயனாக வேறு பெரிய விடயங்களை- பெறுபேறுகளை- எதிர்பார்க்க முடியுமா என்பது வாதத்துக்கு உரியதே!

## ஜனாதிபதியின் வத்திக்கான் விஜயம்: எந்த நோக்கத்தைக் கொண்டது?

கொழும்பு, ஏப்.22

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வத்திக்கான் விஜயம் எந்த நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டது என்பது குறித்து வாதப் பிரதி வாதங்கள் எழுந்துள்ளன.

நாட்டின் இப்போதைய பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கும் முயற்சிகளில் ஒன்றாக சர்வதேசத்தின் ஆதரவைத் தேடும் ஓர் அங்கமாகவே, ஜனாதிபதியின் வத்திக்கான் விஜயம் அமைகின்றது- என்று இலங்கை அரசு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆயினும்- விடுதலைப்புலிகளுக்கு எதிராக இராணுவத் தீர்வைக் காணும் தனது தற்போதைய செயற்பாட்டுக்கு புனித பாப்பரசரின் ஆதரவைத் தேடும் பொருட்டே ஜனாதிபதி வத்திக்கான் சென்றார் என்று கத்தோலிக்கப் பிரமுகர்கள் பலரும் சந்தேகம் எழுப்பி உள்ளனர்.

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வைக் காணப்போவதாக புனித பாப்பரசரிடம் தெரிவிப்பதே ஜனாதிபதியின் வத்திக்கான் விஜயத்தின் உண்மையான நோக்கமாயின், அரசாங்கத்தில் அங்கம் வகிக்காத ஏனைய அரசியல் கட்சிகளைச் சேர்ந்த கத்தோலிக்கப் பிரதிநிதிகளையும் சேர்த்திருக்க வேண்டும்- என்று இளம் கிறிஸ்தவப் பணியாளர் இயக்கத்தைச் சேர்ந்த வண.பிதா ரெயிட் ஷெல்ரன் பெர்ணான்டோ தெரிவித்தார்.

அதற்கும் மேலாக, கத்தோலிக்கத் தமிழர்களில் ஒருவர் கூட ஜனாதிபதியின் தூதுக்குழுவில் சேர்க்கப்படாதது ஏன்?- என்று பலரும் வெளிப்படையாகவே வினவுகின்றனர்.

இதற்கிடையில்-

ஜனாதிபதி மஹிந்தா - புனித பாப்பரசர் பெனடிக் ஆண்டகையின் சந்திப்பின் பின்னர், ஜனாதிபதியின் பேச்சாளர் லூசியன் ராஜ கருணாநாயக்கா கருத்துத் தெரிவித்தபோது:-

எந்த மோதல்களின் போதும் குறைபாடுகளும் மனித உரிமை மீறல்களும் இடம்பெறுவது சகஜமே. ஆனால் ஜனாதிபதி அமைதியையே விரும்புகின்றார். தடங்கலுற்றிருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தையை, இப்போது அது இடுக்கில் அகப்பட்டுள்ள நிலையில் இருந்து விடுவிப்பதற்கான எந்தவகையான உதவியையும் ஏற்றுக்கொள்வதற்கு ஜனாதிபதி தயாராக உள்ளார்- என்று கூறினார். (அ)

## பழுதடைந்த 'ஸ்கானர்' இயந்திரத்தை திருத்துவதற்கு விரைவில் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.22

பழுதடைந்துள்ள யாழ். போதனா வைத்தியசாலை 'சி.ரி.ஸ்கானர்' இயந்திரத்தைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அந்த இயத்திரத்தைத் திருத்தும் தொழில்நுட்பவியலாளர்கள் இங்கு வருவதற்கான பயண வசதிகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை நீக்குவதற்கு அரச அதிபர் உறுதியளித்துள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள 'சி.ரி.ஸ்கானர்' இயந்திரம் கடந்த 3 வாரங்களாக பழுதடைந்த நிலையில் உள்ளது. இதனால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். 'சி.ரி.ஸ்கானர்' செய்ய வேண்டிய நோயாளர்கள் பலத்த சிரமத்தின் மத்தியில் கொழும்பு செல்ல வேண்டியுள்ளது.

'சி.ரி.ஸ்கானர் இயந்திரத்தைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுள்ள நிறுவனத்தின் தொழில்நுட்பவியலாளர்களின் பயணவசதிகள் நெருக்கடியாக உள்ளன. அதனாலேயே அவர்கள் இங்கு வந்து அதனைப் பழுதுபார்க்க முடியாத நிலை உள்ளதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதனையடுத்து சம்பந்தப்பட்ட தொழில்நுட்பவியலாளர்கள் யாழ்ப்பாணம் வந்து திரும்புவதற்கான பயண வசதிகள் உடனடியாக ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என அரச அதிபர் ஆஸ்பத்திரிப் பணிப்பாளருக்கு அறிவித்துள்ளார். (அ-8)

## செயலகத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலைகளுக்கே பொருள்களை விற்கவும்

### ப.நோ.கூ.சங்கங்களுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஏப்.22

யாழ்.செயலகத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கே அனைத்து ப.நோ.கூட்டுறவுச் சங்கங்களும் பொருள்களை விற்பனை செய்ய வேண்டும் என யாழ்.அரச அதிபர் அறிவித்துள்ளார்.

சில ப.நோ. சங்கங்கள் பால்மா, உழுந்து, பயறு, நவ்வை, கற்பூரம் போன்ற பொருள்களை செயலகத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலைகளிலும் பார்க்கக் கூடுதலான விலைக்கு விற்பனை செய்து வருவதாக யாழ்.அரச அதிபரின் கவனத்துக் கொண்டுவரப்பட்டது.

பலநோக்குக் கூட்டறவுச் சங்கங்கள் அவ்வாறு தாம் நினைத்த விலைகளுக்குப் பொருள்களை விற்பனை செய்வதை அனுமதிக்க முடியாது எனவும், யாழ்.செயலகத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கே விற்பனை செய்ய வேண்டும் என்று யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் அறிவித்துள்ளார். அத்தோடு இது தொடர்பான மேற்பார்வைகளை உரிய முறையில் மேற்கொள்ளுமாறு பிரதேச செயலர்களுக்கும், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கும் பணித்துள்ளார். (அ-8)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப்.22

வட்டுக்கோட்டை அடைக்கலந் தோட்டம் கந்தசுவாமி ஆலய பெருந் திருவிழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அடுத்தமாதம் முதலாம் திகதி தேர்த் திருவிழாவும் இரண்டாம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (203)

* * *

யாழ்ப்பாணம், ஏப்.22

கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அடுத்தமாதம் முதலாம் திகதி தேர்த் திருவிழாவும் இரண்டாம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (203)

* * *

யாழ்ப்பாணம், ஏப்.22

வடமராட்சி நவிண்டில் சுந்தர ஐயப்ப ஆலய கும்பாபிஷேகம் எதிர்வரும் 29 ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

28 ஆம் திகதி காலை 8 மணி முதல் மாலை 3 மணிவரை எண்ணெய்க் காப்புச் சாத்துதல் இடம் பெறவுள்ளது. (203)

* * *

சுழிபுரம், ஏப்.22

தொல்புரம் கிழக்கு பூதராசி அம்பாள் ஆலய மகாகும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (203-28)

* * *

சங்கானை, ஏப்.22

சங்கானை அரசடி ஞானவைரவர் ஆலய கும்பாபிசேகம் எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

அடுத்தமாதம் முதலாம் திகதி முதல் 15 ஆம் திகதிவரை மண்டலாபிசேகமும் இடம் பெறவுள்ளது. (203-29)

* * *

யாழ்ப்பாணம், ஏப்.22

ஆனைக்கோட்டை, உயரப்புலம் அருள்மிகு ஸ்ரீ உத்துங்க விநாயகர் திருக்கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா நாளை திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

மே முதல் நாள் மு.ப.10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் மு.ப.10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (4)

## அமெரிக்கத் தரப்பிலிருந்து.....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்புத்துறை செயலாளர் கோதபாய ராஜபக்ஷவே பொறுப்பேற்க வேண்டும் என்று எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றஞ்சாட்டினார். இந்த மாதம் 10ஆம் திகதி ஐ.தே.கட்சி தலைமைப் பணிமனை சிறிகோதாவில் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றிய எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோதபாய ராஜபக்ஷவை அப்பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று மட்டுமல்ல பாதுகாப்பு அமைச்சில் நிலவும் சிக்கல்களைத் தீர்த்துக் கொள்வதற்கு வெளிநாட்டில் அரச தூதுவராகப் பணிபுரியும் ஜானக பெரேராவை அப்பதவியில் அமர்த்த வேண்டும் என்றும் யோசனை தெரிவித்தார்.

சில கட்சிகளின் உறுப்பினர்கள் கடத்தப்படவில்லை என்பதைப் பகிரங்கமாகத் தெரிவித்து கடத்தப்படும் சம்பவங்கள் தொடர்பாகத் தாம் அறிந்திருக்கிறார் என்பதை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒப்புக்கொண்டிருக்கிறார். அதனால் அதற்கு அவர் சட்டபூர்வ பொறுப்பாளியாகிவிட்டார். அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு வேறு ஒருவர் அவ்விடத்தில்- ஜானகபெரேரா போன்ற ஒருவர்- அமர்த்தப்பட வேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

இந்த விதமான புதிய அரசியல் மற்றும் சர்வதேச பிரதிபலிப்புகள் அரசாங்கத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தாமல் இல்லை.

### ஆள்கடத்தல்கள் பற்றி ராதா கிருஷ்ணன்

அலரிமாளிகையில் ஜனாதிபதி தனது கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களுடன் ஏப்ரல் முதல் வாரத்தில் சந்தித்தபோது இந்த விடயங்கள் தலைதூக்கின. இந்த கூட்டத்தில் ஆள் கடத்தல்கள் தொடர்பாகப் பிரதிஅமைச்சர் ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டு பிரச்சினை எழுப்பினார். இ.தொ.காவைச் சேர்ந்த ஆர்.யோகராஜன் அவரதுகூற்றை ஆதரித்தார். ஜனாதிபதிக்கு இது சங்கடமாகவே இருந்திருக்கும்

பிரதி அமைச்சர் ராதா கிருஷ்ணன் பேசும்போது ஆள்கடத்தல்கள் தமிழ் வர்த்தகர்கள் மத்தியில் அச்சத்தைக் கிளப்பியுள்ளது. இக்கூட்டம் நடைபெறும் அதேசமயம் நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் இது தொடர்பாக கடத்தப்பட்டவர்களின் உறவினர்களுடன் ஒரு கூட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார். அதில் ரணில் விக்கிரமசிங்கவும் கலந்து கொண்டுள்ளார் என்று தெரிவித்தார்.

கடத்தப்பட்டவர்களின் உறவினர்களைச் சந்தித்து அவர்களுக்கு சில உறுதிமொழிகளையாவது கொடுப்பீர்களா என்று ராதாகிருஷ்ணன் ஜனாதிபதியிடம் கேட்டார். இதற்கு ஒரு நேரத்தையும் ஒதுக்கினார். இந்த விவாதம் மேலும் நீடித்துச் செல்லாமல் தடுக்க விரும்பிய ஜனாதிபதி அந்த சந்திப்பிற்கு ஈ.பி.டி.பியின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையும் வரும்படி அழைப்பு விடுத்திருந்தார்.

''டக்ளஸ் நீங்களும் வாருங்கள் அவர்களின் கேள்விகளுக்கு நீங்கள் பதில் அளிக்க முடியும் என்று புன்னகையுடன் கூறினார். பின்னர் அவர்வருவதில் ஆட்சேபனை ஏதும் உண்டா என்று ராதாகிருஷ்ணனிடமும் கேட்டார். அவர் இல்லை என்று கூறினார். *

## நாளை

சித்திரை - 10
திங்கட்கிழமை
23.04.2007
திதி: சஷ்டி
காலை : 6.29
நட்சத்திரம்: புனர்பூசம்
பின்னிரவு : 05.25
சுபநேரம் : [illegible]
ராகுகாலம் : 07.30 - 09.00

### மணற்காட்டு பிரதேசத்தில்

## ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்கள் நிரந்தர வீடுகளில் குடியேற அனுமதி மறுப்பு

உடுப்பிட்டி,ஏப்.22

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென மணற்காட்டுப் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட நிரந்தர வீட்டுத் திட்டங்களில் குடியேறுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ந்தும் இடைத் தங்கல் முகாம்களில் பல்வேறு அசௌகரியங்களுடனேயே வாழ வேண்டியுள்ளது என விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென பல அரசசார்பற்ற நிறுவனங்கள் மணற்காட்டில் வீடுகளை அமைத்துக் கொடுத்துள்ளன. இவ்வீடுகளில் சென்று தங்குவதற்கு படையினர் தடை விதித்து வருகின்றனர். இவ்விடயமாக சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளிடம் பாதிக்கப்பட்டவர்கள் முறையிட்ட போதும் இது வரை எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (202-155)

## மக்கள் மன்றம்

### உதவி வைத்தியர்களின் ஆட்சேர்ப்பு

யாழ்.மாவட்டத்தில் தற்போதைய அவலநிலையில் சுகாதார சேவைகள் நீண்ட கால அடிப்படையில் பாதிக்கப்படக் கூடிய அபாய நிலை ஏற்பட்டுள்ளது. அதற்குப் பிரதான காரணம் மருத்துவர் பற்றாக் குறையாகும். தற்போதைய சூழலில் எவரையும் இங்கு கட்டாயமாகக் கடமையாற்றுமாறு கூறமுடியாதுள்ளது. கூர்ப்புக் கொள்கையின் அடிப்படை தக்கன பிழைத்தல் என்பதற்கு ஏற்ப உள்ளன பிழைத்தல் என்பதே யாழ்ப்பாணத்தின் நிஜ வாழ்க்கையாகிவிட்டது.

ஆனால் யாழ்.மாவட்டத்தில் உள்ள 6 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்களுக்கு அடிப்படைச் சுகாதார வசதிகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளச் சுகாதாரக் கட்டமைப்பை உறுதிப்படுத்தல் அவசியம். எமது பிரதேசங்களில் உள்ள வைத்தியசாலைகள், மருந்தகங்களில் 60 பதிவு வைத்தியர்களுக்கு வெற்றிடங்கள் உள்ளன. மேலும் தற்போது கடமையில் உள்ளவர்களும் ஓய்வு நிலையில் உள்ளவர்களே.

எனவே நீண்டகால நோக்கில் குறைந்தது 100 உதவி வைத்தியர்களையாவது பயிற்றுவிக்கவேண்டிய அவசர தேவை உள்ளது.

இதற்கு உலக சுகாதார நிறுவனங்களின் யாழ்.மாவட்டக் கிளையும், மாகாண பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர், மருத்துவ பீடாதிபதி, துணைவேந்தர், அரசாங்க அதிபர் போன்றோர் இணைந்து செயற்பட்டால் விரைவில் பலன் கிடைக்கும். இரண்டு வருடகாலப் பயிற்சி நெறியை யாழ்ப்பாணத்தில் வழங்குவதற்குப் போதிய இடவசதி யாழ்ப்பாணப் பிராந்தியப் பயிற்சி நிலையத்தில் உள்ளது.

மருத்துவக் கல்வியைக் கற்பிக்கக் கூடிய பேராசிரியர்கள், வைத்திய நிபுணர்கள் யாழ்.மருத்துவ பீடத்திலும் யாழ்.போதனா வைத்தியசாலையிலும் உள்ளனர்.

எனவே சமூக ஆர்வலர்கள் இதற்கு முன்முயற்சி எடுத்து புதிதாக எமது பிரதேசத்திற்கு மருத்துவர்களை உருவாக்க வேண்டும்.

*டாக்டர் சி.யமுனாநந்தா*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



சீரான குடும்பமொன்றின் குலவிளக்காய் மிளிர்ந்திட்டீர்
மாறாத நினைவுகளை மனதினிலே பதித்து வைத்தீர்
மாறாது - மம்மி! தங்கள் பிரிவுத் துயர் மண்ணுலகிலே
பேரான பரம்பொருளின் திருவடியில் சேர்ந்தீரே மம்மி!

கடந்த 23.03.2007 அன்று அமரத்துவம் அடைந்த அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியை இன்று (22.04.2007) ஞாயிற்றுக்கிழமை இல.21,புனித அந்தோனியார் வீதி, திருகோணமலையிலுள்ள எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இதில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.

**அன்னாரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திப்போமாக.**
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

தங்கள் ஒளியின்றி வாடும்:
பாசமிகு பிள்ளைகள்:
திருமதி க.மல்லிகாதேவி, செல்வி பீ.பத்மராணி
சகோதரன்: க.சந்திரசேகரி, மைத்துனி: திருமதி ச.பராசக்தி,
மருமகன்மார்: க.கருணாகரன், ச.முருகதாஸ்,
மைத்துனர்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## திருமதி சிவயோகம் பீதாம்பரம்

(ஓய்வூதியர்)

| தாயின் மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 04-07-1931 | 23-03-2007 |

திதி: 22.04.2007 (ஞாயிற்றுக்கிழமை)

நிரந்தர முகவரி:
'சிவபதி'
விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

தற்போதைய முகவரி:
இல.21, புனித அந்தோனியார் வீதி,
திருகோணமலை.


UNIT 347,K.K.S. Road, Jaffna.
T.P: 021 4590720 (மனோகரா தியேட்டர் சந்தி)
சகல P4 கணினிகளும் குறைந்த விலைக்கே!
Special Offer



A to Z கணனி உதிரிகள் உத்தரவாதத்துடன்



**விற்பனைக்கு**
நல்ல நிலையிலுள்ள ஒரு கைப்பாவனையிலிருந்த HONDA CB 125 (Black) ரக மோட்டார் சைக்கிள் மற்றும் மேசைகள், கட்டில் என்பன விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:-
171 A, நிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:- 0212223324,
0777593751.


## 16ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 07.04.2007 சனிக்கிழமை சிவபதம் எய்திய எமது குடும்பத் தலைவி

### திருமதி இரத்தினம் மகேஸ்வரி



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (22.04.2007) ஞாயிற்றுக்கிழமை காலை 9மணியளவில் வில்லூன்றி புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் நாளை (23.04.2007) திங்கட் கிழமை பகல் 12மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெற இருப்பதால், இந் நிகழ்வில் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.


# HIGHER STUDIES IN INDIA, BANGLADESH & CHINA

Post Graduate : Available Fields :

MBA Master of Business Administration
MCA Master of Computer Application
Msc Master of Science BT/MB
Mpharm Master of Pharmacy
M.Tech Master of Technology
MSc Medical Anatomy
MSc Medical Physiology
MSc Medical Microbiology
MSc Medical Pharmacology
MSc Medical Bio Chemistry
MSc InformationTechnology

Undergraduate
M.B.B.S. Medicine

B.Tech Information Technology
Textillo Technology
Textillo Chemistry

B.E. Computer Science
Electronics & Communication
Bio Technology
Electrical & Electronics
Telecommunication
Chomical
Medical Electronics
Information Science
Industrial & Management Civil

B.Sc. Micro Biology
Bio Technology
Information Technology
Computer Technology
Medical Lab Technology
Nursing
Bpharm Pharmacy
Apparol & Fashion Technology
Textile & Fashion Designing

B.C.A Computer Application
B.Com Banking & Finance
Accounting
B.B.M Management
Hospitality Management
Business Management
Management Information system
Public Relations
B.H.M Hotel Management

B.A European Studies
English Language & Literature
Early Childhood Education
Music Education & Performance
Physiology

Integrated Courses
M.Sc Software Engineering
Information Technology

Pre-University/Paramedical Courses

Affiliated to Bangalore, Rajive Gandhi & Visvesvaraya Universities
Recognized by the Government of Karnataka. Approved by AICTE
Medical Degrees are Recognized by Sri Lanka Medical Council, WHO & British Medical Council

Inquires : Institute of Vocational Studies (Pvt) Ltd.
Main Office : 476, Kandy Road, Dalugama, Kelaniya.
Tel : 0777444500.
Email : ivsltd@sltnet.lk
Website: www.ivstudies.com
(59797)

Hurry for your Registration
Closing Date 15th May 2007


## மட்டக்களப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

165,000 பேரை பலவந்தமாக அரசு மீள் குடியமர்த்தி வருவதாக அரச சார்பற்ற நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

பலவந்தமாக அவர்களுக்கு விருப்பம் இல்லாத இடங்களில் - தமிழ் அகதிகள் மீளக்குடியமர்தப்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

அகதி முகாம்களில் பெரும் இன்னல் களை அனுபவிக்கும் அகதிகள் தமது சொந்த இடங்களில் தம்மை குடியமர்த்தும்படி கோருகின்றனர்.

அவர்களின் கிராமங்களில் பாதுகாப்பு இல்லை எனத் தெரிவித்து வேறு இடங்களில் அவர்களைப் பலாத்காரமாக குடியமர்த்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

அகதிகளை அவர்களது சொந்த விருப் பத்துக்கு மாறாக மீளக்குடியமர்த்துவது ஐ.நா. அகதிகள் உரிமைகள் சாசனத்துக்கு முரணானது ஆகும். இதனை யு.என். எச். சி.ஆர். போன்ற சர்வதேச அமைப்புகள் எடுத்துக்கூறியும் அரசாங்கம் செவிசாய்ப்பதாக இல்லை.

இதனால் அதிகளுக்கு உள்ள உரிமைகள் குறித்த அறிவையும் தகவல்களையும் துண்டுப் பிரசுரங்கள் மூலமும் ஏனைய பரப்புரை மார்க்கங்கள் ஊடாகவும் சர்வதேச நிறுவனங்கள் செய்து வருகின்றன.

எனினும் அரசாங்கம் மறைமுகமான அச்சுறுத்தல்கள், பாரபட்ச நடவடிக்கைகள் மூலம் தமிழ் அகதிகளின் விருப்பத்துக்கு மாறாக மீளக்குடியமர்த்தி வருகிறது. (அ-1)

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிடப்படும் என்றுகட்சியின்பொதுச் செயலாளர் மைத்திரி பால சேனநாயக்கா தெரிவித்தார்.

மாகாண சபைகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குவதற்கு ஏதுவாக மத்திய அமைச்சரவைக் கூட்டங்களில், தேவை ஏற்படும்போதெல்லாம் மாகாண அமைச்சர்களும் கலந்து கொள்வதற்கும் ஸ்ரீ.ல.சு.கட்சியின் யோசனையில் ஓர் அம்சம் அடக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது. (அ-1)


சுடர் ஒளி வார இதழ்
இவ்வாரத்திற்குரிய
ஏப்ரல் 22-28, 2007
சுடர் ஒளி இன்று குடாநாட்டில் விற்பனையில்!



உங்கள் உதயன் முகவரிடம் வாங்கலாம். அவரிடமே பதிவுகளையும் மேற்கொள்ளுங்கள்.
விமானக் கட்டண விலை ரூ.35/=


## - உன் நினைவில் நாம் -



### முருகையா மயூரா

(முதலாம் வருட மாணவி, முகாமைத்துவ வணிக பீடம்)

யாரோடும் அதிகம் பேசாத நீ உன் சாவை பலரும் பேச வைத்தாயே!
எம்மிடம் கூறாமல் உன் குறையை கூற்றுவனிடம் கூறிய மாயம் இன்னும்
நாம் அறியோம்! என்றும் எம் நினைவில் இனிய சோதரியாய் நீ இருக்க
இறைஞ்சுகின்றோம் இறைவனிடம் உன் ஆத்மா ஈடேற!

சாந்தி! சாந்தி! சாந்தி!

மூன்றாம் வருட முகாமைத்துவ வணிக பீட மாணவர்கள்,
யாழ்.பல்கலைக்கழகம்.
(59840)


கிருஷ்ணா கல்வி நிறுவனம்
இணுவில் வீதி, மானிப்பாய்.
A/L 2009
கலைப்பிரிவு
முன்னணி ஆசிரியர்களுடன் உதயமாகின்றது.
ஆரம்பம் :
23.04.2007 திங்கள் பி.ப 3மணி
தரம் 6 - 11 வரையான வகுப்புகளும் நடைபெறுகின்றன.



தென் கோவையில் ஓர் புதிய உதயம்
உயர்தர மாணவர்களுக்கோர் வரப்பிரசாதம்
மதுரம் இன்ஸ்ரிரியூட்
கலைப்பிரிவு
ஆரம்பம் :- 01.05.2007 பி.ப.3
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
MATHURAM INSTITUTE
பருத்தித்துறை வீதி, கட்டப்பிராய்.



ஐடியல் அக்கடமி
நீராவியடி, யாழ்ப்பாணம்
O/L Day Class
பிரிவு - 2
ஆரம்பம்: 23.04.2007
காலை 8 மணி
கணிதம் V.N.பத்மநாதன்



SALES EXECUTIVE
(JAFFNA)
"PENTEC / STYLEX" BRAND
எழுது கருவிகளை உற்பத்தி செய்து நாடு முழுவதும் விநியோகிக்கும் நிறுவனத்திற்கு
SALES EXECUTIVE
வேண்டப்படுகின்றனர்.
பிரதேசம் :-
யாழ்ப்பாணம்/பருத்தித்துறை.
தகைமை :-
க.பொ.த. (உ/த)
விற்பனைத்துறையில் முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பப்படும். சுய விவரக் கோவையுடன் விண்ணப்பிக்கவும்.
FAX : 0112448211


# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி இராசரத்தினம்



**(கார் உரிமையாளர், EN 7772)**

கற்பகப் பிள்ளையார் கோயிலடி, உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இராசரத்தினம் 21.04.2007 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.04.2007) திங்கட்கிழமை பி.ப.2 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் கிழக்கு, இணுவில். (59845) தகவல்: இ.நவநீதன் (மகன் U.K)

## இளையதம்பி சோமாஸ்கந்தா

**(ஓய்வுபெற்ற மருந்தாளர் - யாழ்.போதனா வைத்தியசாலை, கொழும்பு தேசிய வைத்தியசாலை)**

மூளாயைப் பிறப்பிடமாகவும் இல 163/9, அமரசேகர மாவத்தை, கொழும்பு - 05 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி சோமாஸ்கந்தா 18.04.2007 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.


அன்னார் மூளாயைச் சேர்ந்த அமரர் இளையதம்பி தம்பதியரின் மகனும் இடைக்காட்டைச் சேர்ந்த ஆறுமுகம் தம்பதியரின் மூத்த மருமகனும் சாரதாதேவியின் (மருந்தாளர் - கொழும்பு தேசிய வைத்தியசாலை) அன்புக்கணவரும் Dr.பிரசாந்தி (நோர்வே), Dr.மதனகுமாரா (ராகம வைத்தியசாலை), சர்மிஷ்டா (கணனி பொறியியலாளர், கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுதர்ஸனின் (பொறியியலாளர், நோர்வே) மாமனும் ஆதீஸின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு நாளை (23.04.2007) திங்கட்கிழமை பி.ப.4.30 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக பொரளை கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். அன்னாரின் அஞ்சலி நிகழ்வுகள் இடைக்காட்டில் உள்ள இல்லத்தில் நாளை ஏக காலத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செம்பிகலட்டி,
இடைக்காடு, அச்சுவேலி. (450057) தகவல்: திருமதி புவனேஸ்வரி ஆறுமுகம் (மாமி)

## தோமஸ் பீற்றர் பொன்கலன் (கில்லறி)



**(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், C.T.B)**

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் தற்போது கல்வியங்காட்டில் வசித்து வந்தவருமாகிய தோமஸ் பீற்றர் பொன்கலன் (கில்லறி) நேற்று (21.04.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தோமஸ் - ஆனாள் பிள்ளை தம்பதியரின் புதல்வனும் அனாவின் அன்புக் கணவரும் யூட், றெக்ஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரஞ்சினி, ரேகா ஆகியோரின் மாமனும் ஆர்த்திகன், அபிஷனா, அக்ஷனா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற ஜோசப், செல்வம், காலஞ்சென்ற திரேசம்மா, மரியம்மா (ஓய்வு பெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2007) ஞாயிற்றுக்கிழமை பி.ப.2 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக யாழ்.புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புலவனார் வீதி,
கல்வியங்காடு. (59884) தகவல்: யூட் (மகன்)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.04.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org